A CCD (Development)

97

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணம்
සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු - නැගෙනහිර පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT
NORTH-EAST PROVINCE
உட்துறைமுக வீதி, திருகோணமலை. / ඇතුල් වරාය පාර ත්‍රිකුණාමලය / Inner Harbour Road, Trincomalee

எனது இல. / මගේ අංකය / My No. NEP/CO/GEN/02

உமது இல. / ඔබේ අංකය / Your No.

2006.11.09

சுற்றறிக்கை இல: 14/2006

சகல கூ.அ.உ..ஆணையாளர்களுக்கும்.

## கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 58ம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் தொடர்பாக நடுத்தீர்ப்பாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்

1. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 58ம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகளை விசாரிக்கும் நடுத்தீர்ப்பாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணங்கள் 01.11.2006 இலிருந்து நடைமுறைக்கு வரும்வண்ணம் பின்வரும் விதிமுறைகளுக் கமைய நடைமுறைப்படுத்த வேண்டும்.

1.1 பொதுப் பிணக்கு :

| பிணக்குத் தொகை | கட்டணம் |
|---|---|
| ரூபா 5,000/- வரை | ரூபா 750/- |
| ரூபா 5,001/- - ரூபா 10,000/- | ரூபா 2,000/- |
| ரூபா 10,001/- - ரூபா 25,000/- | ரூபா 3,000/- |
| ரூபா 25,001/- - ரூபா 100,000/- | ரூபா 4,000/- |
| ரூபா 100,001/- - ரூபா 250,000/- | ரூபா 5,000/- |
| ரூபா 250,001/- - ரூபா 500,000/- | ரூபா 6,000/- |
| ரூபா 500,001/- - ரூபா 750,000/- | ரூபா 7,000/- |
| ரூபா 750,001/- - ரூபா 1,000,000/- | ரூபா 8,000/- |
| ரூபா1,000,001/- இற்கு மேல் | ரூபா10,000/- |

1.2 சகல விதமான கடன் பிணக்குகளுக்கும் நடுத்தீர்ப்பாளர் கட்டணமாக ரூ.500/- வழங்கப்படும்.

1.3 சகலவிதமான பிணக்குகளின் விசாரணைகள் தொடர்பாக ஏற்படும் தபால், காகிதாதி செலவுகளுக்கு ரூபா 250/- இற்கு மேற்படாமல் செலவுத்தொகை வழங்கப்படலாம்.

...லகம் / කාර්යාලය / Gen.Office : 026-2222189.
தொலை நகரி / ෆැක්ස් / Fax : 026-2220856.
...ணயாளர் / කොමසාරිස් / CCD&RCS (NEP): 026-2221019
உ.ஆணையாளர் / ස.කොමසාරිස් / Asst.Commissioner: 026-

2.10 ரூபா 10,000/- இற்கு மேலுள்ள பிணக்குகள் :

கூ.அ.அலுவலர் தரம் 11'ஆ' பிரிவைச் சேர்ந்த 05வருட சேவை அனுபவமுள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர், அல்லது கூ.அ.அலுவலர் தரம் 11'அ' பிரிவைச் சேர்ந்த அலுவலர்.

3. தபால், காகிதாதி செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றக்கொள்ள முடியும்.

4. நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கும்போது அல்லது சிபாரிசு செய்யும்போது அவர்களது திறமை, நேர்மை, ஆற்றல் என்பன உங்களால் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

5. ரூ.25,000/- வரையான பிணக்குகள் உங்களாலேயே நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம். ரூ.25,000/- க்கு மேற்பட்ட பிணக்குகள் யாவற்றுக்கும் எனது அனுமதிக்கமையவே நடுத்தீர்ப்பாளர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

6. இவ்வாறு ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் நியமனத் திகதியிலிருந்து 03 மாதத்தினுள் குறிப்பிட்ட நடுத்தீர்ப்பாளரால் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும். கால நீடிப்புக்கோருமிடத்து நியாயமெனக் காணப்படின் நீடிப்பு வழங்கப்படலாம். அல்லது அவரது இடத்திற்கு பிறிதொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

7. நடுத்தீர்பாளர் ஒருவரால் விசாரணை முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகள் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும், அவற்றின் தரம்பற்றி தங்களால் ஆராய்ந்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

8. நடுத்தீர்ப்புக் கட்டணமாக சங்கங்களிடமிருந்து பெறப்படும் வைப்புக்கள் யாவற்றிற்கும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதுடன், இதற்கான காசேடும், பேரேடு ஒன்றும் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

எனது என்ஈபி/சீஓ/திட்-02 இலக்கம் கொண்ட, 2001.10.20 ஆந் திகதியிடப்பட்ட 05/01ம் இலக்க சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றேன்.

ஆ.சுப்பிரமணியச்சர்மா,

கூ.அ.ஆணையாளரும்,

கூ.ச.பதிவாளரும் (வகிமா.)